495

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 MAY 1912
MADRAS.

உ

சிவமயம்

ஒட்டப்பிடாரம்

என்னும்

அழகியவீரபாண்டியபுரம்

உலகம்மன் கீர்த்தனம்.

இஃது

ஒட்டப்பிடாரம் வக்கீல்

குருமலை சுந்தரம்பிள்ளையவர்கள்,

விருப்பத்தின்படி

ஷெயூர்

பாகவதர் S. முத்துசுவாமியாபிள்ளையவர்கள்

இயற்றியதை

ஸ்ரீவைகுண்டம் தாலுகா வேளூர் T. தெய்வநாயகம்பிள்ளை
அவர்களால் பார்வையிடப்பட்டு

திருநெல்வேலி நூருல் இஸ்லாம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதிகிருது வரு

1912

முதற்பதிப்பு காப்பி 1000]

...லை அணா 1

Q25:417
M12
146973

உ

சிவமயம்

OFFICE OF THE REGISTRAR ...
REGISTERED
10 MAY 1912
MADRAS.

ஒட்டப்பிடாரம்

என்னும்

அழகியவீரபாண்டியபுரம்

உலகம்மன் கீர்த்தனம்.

இஃது

ஒட்டப்பிடாரம் வக்கீல்

குருமலை சுந்தரம்பிள்ளையவர்கள்,

விருப்பத்தின்படி

ஷையூர்

பாகவதர் S. முத்துசுவாமியாபிள்ளையவர்கள்

இயற்றியதை

ஸ்ரீவைகுண்டம் தாலூகா வேளூர் T. தெய்வநாயகம்பிள்ளை

அவர்களால் பார்வையிடப்பட்டு

திருநெல்வேலி நூருல் இஸ்லாம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதிகிருது வருஷ

1912

[முதற்பதிப்பு காப்பி 1000]

இதன் விலை அணா 1.

உலகம்பாள்.

உ

சிவமயம்

உலகம்மன் கீர்த்தனம்.

காப்பு.

தென்னழகை நன்னகர்வாழ் தேவியுலகேஸ்வரி மீ
தின்னிசைசேர்பாட வியம்புதற்கப்—பொன்னழகைச்
சித்திவிநாயகன்றன் சேவடியே தஞ்சமென
நித்தமன மே நீ நினை.

கீர்த்தனை 1.

இராகம்-அம்ஸதொனி. தாளம்-ஆதி.

பல்லவி.

அம்பிகையே அருள்செய்வாய் நீயே.

அநுபல்லவி.

நம்பினேனம்மா நின்செம்பொற்பாதம்
என்பாலெப்போதும் அன்புவைத்தாள்வாயே (அம்பி)

சரணங்கள்.

1. அண்டமெல்லாம் புகழும் பூரணி
மண்டலமெங்கும் மகிழும் நாரணி
எண்டிசையும் நின் இணையடி நாடித்
தொண்டுசெய்துன்னைத் துதிப்பார்கள்பாடி (அம்பி)

2. பத்தன் நான் முத்து சாமிநின்தாசன்
நித்தமுமுன்னை நினைக்கும் விஸ்வாசன்
அத்தனிடத்து அமரீஸ்வரியே.
உத்தமியே யெம் உலகேஸ்வரியே (அம்பி)

கீர்த்தனை 2.

"சைசஜாதுடலா என்றமெட்டு"

இராகம்-செஞ்சுருட்டி தாளம் ஆதி.

பல்லவி.

அன்னையே உலகேஸ்வரி
என்னையாள் பரமேஸ்வரி.

அநுபல்லவி.

நின்னையே நம்பினேன் எந்தாயே
பொன்னழகை வாழ்வு தந்தாயே, (அன்னை)

சரணங்கள்.

1. மெத்தவே மனது நொந்து
தத்தளிக்குமென்னை வந்து
சித்தம் வைத்துக்காப்பாய் அம்மணி
உத்தமீ பரி பூரணி. (அன்னை)

2. அண்டர்முதல் யாரும் போற்றும்
அந்தரி நிரந்தரியே
தொண்டு செய்துபாட அருள்வாய்
மண்டலம் புகழ் நாயகி. (அன்னை)

3. மாசிலா மலர்கள் தூவி
நேசமாய்ப் பதம்பணியும்
தாசன் முத்துசாமி சொல்மாலை
வாசமாயணி சுந்தரி. (அன்னை)

கீர்த்தனை 3.

இராகம்-கமாஸ் ஆதிதாளம்.

பல்லவி.

தாயே உனையே நம்பினேன்
உலகாண்ட ஈஸ்வரித் (தாயே)

அநுபல்லவி.

தாயேயுனை நம்பினேன் சேயேனெனைக் கண்பாராய்
நாயேனுனை யடுத்தேன் நீயேயெனை ரக்ஷிப்பாய். (தாயே)

சரணங்கள்.

1. ஓயாக் கவலையினால் உன்பதம் நான் மறந்தேன்
நேயம்வைத் தென்பிழையைநீக்க வுனைப்பணிந்தேன் (தா)

2. திருவழகையில்வாழும் தேவியுன் கிருபையினால்
மருவிலா வாழ்வு தந்து மைந்தன் றனையே காக்க (தாயே)

3. முத்துசாமி யுன்மீதிற் பத்தியுடன் பாடினேன்
சித்தம் வைத்தருளுவாய் நித்ய கல்யாணியே யென் (தா)

கீர்த்தனை 4.

இராகம்-கல்யாணி தாளம்-ரூபகம்.

பல்லவி.

அம்பாவுன தன்பாலெனை
ஆதரித்தருள் செய்குவாயுல (கம்பா)

அனுபல்லவி.

நின்பாதமே நம்பினோர்களைத்
துன்பமணுகாமற் செய்யுல (கம்பா)

சரணங்கள்.

இந்த அழகை நகரிற்பிறந்து என்றுமுன்மேற் கவிகள் புரிந்து
சந்ததமுனைப்பணிந்தபேர்க்குத் தாரணிதன்னிற் குறைகளுமுண்டோ

சொந்தமென் றெனக்கருள்செய்யுங்
குணபுங்கவி மணமங்கலி
வெகு சுந்தரி மிருதந்திரி
யுனையண்டின னருள்வாயுல (கம்பா)

பத்தியுடன் பணிவோர்தமைப் பாக்யவந்தராக்கி வைப்பாய்
புத்திதனைக்கொடுத்து மிக வித்தையெனக்கருள்வாயுன்மேற்

சித்தம் வைத்தோர்க் கருள்பூரணி
திரிசூலினி யடியார்பணி
பரிபாலினி திகழ்வாரணி
ஜெககாரணி யருள்வாயுல (கம்பா)

தாசன் முத்துசாமியின்மேல் நேசம் வைத்தேயருள்புரிவாய்
பாசமுடன் சொல்பதத்தை வாசமலராயணிவாய்

தேசமெங்கும் புகழீஸ்வரி
ஜெகதீஸ்வரி சுககாரணி
பரமேஸ்வரி கிருபாகரி
அழகேஸ்வரி அருள்வாயுல (கம்பா)

கீர்த்தனை 5.

["ஸ்ரீ ராமச்சந்திரன்" என்ற வர்ணமெட்டு]

இராகம்-இந்துஸ்தான்பியாக் தாளம் ஆதி.

கண்ணிகள்.

நம்பினேன் நாளுமுலகம்பிகையே யென்றன்
நாவில் நல்வாக்குதிக்க வா—வா—வா
எம்பெருமாட்டியுனைப் போற்றினேன்—தினம்
உன்பெருமையைப் பற்றியேற்றினேன்—நான். (1)

சொந்த அடிமையாகி என்றும் நினைத்துதித்தேன்
இந்த சமயம் வந்து கா—கா—கா
சிந்தை மகிழ்ந்துனையே பாடினேன்—அதி
சுந்தரியே உன்பதம் நாடினேன்—உன். (2)

சந்தோஷமாக வந்தென் சஞ்சலங்களை நீக்கி
உந்தன் பக்தனுக்கருள் தா—தா—தா
பந்தானமாமுலக வாழ்வையே—தந்து
சிந்தாகுலந்தவிர்த்து ஆள்வையே—மிகு (3)

அன்பன் பொருள்களெலா முன் பின் சொலாதபடி
என்பாலிந்த வேளையில் சேர்—சேர்—சேர்
உன்பாலெந்தன் குறையைக் கூறினேன்—நின
தன்பால் மனந்தெளிந்து தேறினேன்—உன். (4)

மெய்யானதெய்வமென்றுகையாலுனைத் தொழுதேன்
உய்யும்படிக்கடைக்கண்—பார்—பார்—பார்
துய்யவுனடி பணிந்தேன் அன்னையே—இனி
ஐயமில்லாமல் காப்பாயென்னையே—நீயே (5)

ஆரணியே யிந்த அழகை நகரில் வாழும்
பூரணியே யென்குறை—தீர்—தீர்—தீர்
தாரணியிலுனையே யெண்ணினேன்—திரு
நாரணியே யுனையே நண்ணினேன்—எங்கள். (6)

முத்துசாமியுன்மீதில் சித்தம்வைத்துப்புகழ்ந்தேன்
நித்தமெனக்குனருள்—கூர்—கூர்—கூர்
குத்தங்களைப் பொறுத்துத் தள்ளுவாய்—எந்தன்
பத்திதனை மனதிற் கொள்ளுவாய்—அன்பன் (7)

கீர்த்தனை 6

["இந்தனை கோபமாதுமா" என்றமெட்டு]
இராகம்—பியாக் தாளம்—ஆதி.

பல்லவி.

தாயே நீ கிருபை செய்குவாய்

அநுபல்லவி.

சேயேனுனைத்துதிப்ப தோயா தொருபோதும் (தாயே)

சரணங்கள்.

அழகைநகரில்வாழும் அன்னையுலகேஸ்வரியே
அன்புவைத்துப்பண்புடனே இன்பமதாய்ச்சொல்லு தமிழ்க்
கிணங்கியருள்செய்திந்த ஏழைமுகம்பார்த்திரங்கித் (தாயே)

நித்தம்பிரபஞ்சத்தில் மெத்தமயங்குகின்றேன்
எத்தனைபிழைசெய்தாலும் அத்தனையுமேசகித்து
பெத்தபிள்ளையாகினைத்து உத்தமியேநீபொறுத்துத் (தாயே)

தாசன்முத்துசாமிதுதி நேசமுடன்கொண்டருளும்
ஈசனிடப்பாகம்வைத்த மாசில்கருணசரியே
பாசபந்தவல்வினையைப் பற்றறுத்துக்காக்கவென்றன் (தாயே)

கீர்த்தனை 7.

["உள்ளதைச் சொல்லு நீ" என்றமெட்டு.]

இராகம்-காப்பி தாளம்-ஆதி.

பல்லவி.

சித்தமிறங்குதற்கு இத்தனை காலமேனோ.

அநுபல்லவி.

எத்தனையோ விதமாய்ப் பத்திசெய்து பாடியும் (சித்த)

சரணங்கள்.

1. உத்தமியே யுனையே நித்தமு நான் பணிந்தேன்
சத்தியமாமிதென்று சாற்றியுமேழை மீதிற் (சித்த)

2. வாவிவளங்கள் மிக மன்னுமழகை வாழும்
தேவியுலகேஸ்வரி தீனரக்ஷணியே யுன் (சித்த)

3. பாசம் வைத்துனைப் போற்றிப் பாடினேன் முத்துசாமி
தாசனெனக்குனருள் தா தாவென்று சொல்லியும் (சித்)

கீர்த்தனை 8.

["நாமனவி வினவய்யரா" என்றமெட்டு]

இராகம்—சக்ரபாகம் தாளம்—ரூபகம்

பல்லவி.

ஸ்ரீலோக நாயகியே
சிறியேனுக்கருள் தருவாய்நீயே

அநுபல்லவி.

பூலோகரக்ஷணியேநானிதம் போற்றினேனுந்தன்பொன்னடியிந்த
பார்தனிலே யுனைநம்பின
பேர்தமை வந்தினிதாளும்
கார்குழலா யடியேற்குச்
சீரடி தந்திடவாராய் (ஸ்ரீ)

சரணம்

அத்தனுகந்த அழகைவாழும்
சத்தியேயுன்மேற் சித்தம்வைத்திடும்
முத்துசாமி தாசனுந்தன்மேல்
பத்தியாய்ச் சொல்லும் பாடல்கேட்டருள்
முக்தர்களும் புலம்வென்றிடு
சித்தர்களும் பணிகொண்டிடு
பத்தர்களும் துதிசெய்திடு
உத்தமியென்குறை தீர்ந்திட (ஸ்ரீ)

கீர்த்தனை 9.

["மனசுகரக" என்ற மெட்டு]

இராகம்-ஹம்ஸத்வனி தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏழையின் துயர் தீர்த்திடவுல
கேஸ்வரி யிது சமயமே.

அநுபல்லவி.

வாழைசூழழகை நகர் வாழுமகிலேஸ்வரித்தாயே (ஏழை)

சரணங்கள்.

இந்நிலத்தில் நாயடியேன் நின்னடியே வந்தடைந்தேன்
தன்னிகரில்லாத நீயே தமியேனையாதரிப்பாயே
இன்னமுநீ யிரங்காவிடி லென்ன செய்வேன் ஜெகரக்ஷணியே
[ஏழை]

அன்பர்களெல்லாந் துதிக்கும் அந்தரியே வுன்னை நிதம்
நம்புமுத்துசாமி சொல்லே நாரணியே கேட்டுகந்துன்
செம்பொற்பதந் தந்தருள்வாய் ஜெகதீஸ்வரி கிருபாநிதியே.
[ஏழை]

கீர்த்தனை 10.

["தேலியலேதுராமா" என்றமெட்டு]

இராகம்—தோடி தாளம்—ஆதி

பல்லவி.

இன்னந்தயைசெய்யா திருப்பதுஞ்சரியா

அநுபல்லவி

சென்னல்சூழழகை நன்னகரில்வாழும்
அன்னையுலகாளே என்னைநீ ரக்ஷிக்க (இன்ன)

சரணங்கள்.

மைந்தன்மீதிலின்னும் வர்மமென்னசும்மா
மகிழ்ந்தடியேன்வேண்டும் வரங்கொடுப்பாயம்மா
மாதலந்தனிலுன் சீதமலரடியை
மனதுடன் பணிந்தேன் தினமுனை நினைந்தேன் (இன்ன)

எந்தன்மடமையினால் உந்தனடிமறந்தேன்
ஏழைமுத்துசுவாமி என்னபிழைசெயினும்
சிந்தையிலெண்ணாது சிறியேனையாதரித்து
உந்தனருள்தந்தென் னுளங்களிக்கும்வண்ணம் (இன்ன)

கீர்த்தனை 11.

["மாதேமருவிடவா" என்றமெட்டு.]

இராகம்-காம்போதி தாளம் ஆதி.

பல்லவி.

உந்தன் கிருபை தருவாய் உன்
மைந்தன்நனைக்காத்துச் சிந்தை மகிழ்ந்திடவே (உந்த)

அநுபல்லவி.

தந்தையும் நீ யெனக்குத் தாயும் நீ நானுனக்குச்
சொந்தமகவா கினேன் இந்தச் சிறுவனுக்கு (உந்த)

சரணங்கள்.

மல்லிகை முல்லையிரு வாக்ஷி செண் பகரோஜா
அல்லிமலர்கள் கொண்டு அன்பாயர்ச்சனை செய்தேன் (உந்த)

அல்லும் பகலும் நினைச் சொல்லுமடியார் வினை
வெல்லும் வரங்கள் தினம் நல்கும்பரமேஸ்வரி (உந்த)

அச்சுதன் தங்கையாகி அழகை நகரமர்ந்தாய்
பச்சம்வைத்தாண்டானுக்குப் பாடவரங் கொடுத்தாய் (உந்த)

உத்தமியேயுல கேஸ்வரியேயுனையே
பத்தியாய்ப்பாடுமிந்த முத்துசாமிதனக்கு (உந்த)

கீர்த்தனை 12.

["அள்ளியள்ளி நீர்குடிக்கும்" என்றமெட்டு]

இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ஏகம்.

கண்ணிகள்

1, அகிலமெல்லாம்புகழும் அம்மையுலகேஸ்வரியே
அருள்செய்யவேணுந்தேவியே-கிருபாநிதியே (அருள்)
அந்தரியேயுனைச் சிந்தையிலவைத்தவர்க்
கெந்தவாமுநீ தந்தருள்செய்குவாய் (அகில)

2. நின்பதமேயெளியேன் அன்புடனேபணிந்தேன்
துன்பம்வராமற்காப்பாயே—எப்போதும்நீ (துன்ப)
நித்தமுமுன்பணி சித்தமுடன்புரி
பத்தர்களுக்கருள் உத்தமியேநிதம் (நின்பத)

3. பெற்றபிள்ளைகளென்ன குற்றங்கள்செய்தாலுமுன்
சித்தமிரங்கியாள்வையே—பொருத்தருளிச் (சித்த)
வந்தனைசெய்துன் மலரடியேதினம்
சிந்தனைபண்ணும் சிறுவர்களாகிய (பெற்ற)

4. சத்துருவானபேர்கள் மித்திரம்செய்தாலுமொரு
குற்றம்வராமற்காப்பாயே—அநுதினமும் (குற்ற)
அத்தனிடத்தில் அமர்ந்தருளன்னையே
உத்தமியேயுனை நித்தம் வணங்கினேன் (சத்து)

5. தாசன்முத்துசாமிசொல்லை வாசமலராயணிந்து
நேசம்வைத்தருள்புரிவாயே-என்னாளும்வாழ்க (நேசம்)
பாசமுடன்சொலும் பண்களிலேதேனும்
தோசமிருப்பினும் நீசகித்தேவுன்றன் (தாசன்)

PB
2-108

கீர்த்தனை 13.

["என்னை நீ கைவிடில்" என்றமெட்டு]

இராகம்—காம்போதி தாளம்—ஆதி.

பல்லவி

என்றுதானீகாப்பாய் ஏழைதுயர்தீர்ப்பாய்.

அநுபல்லவி

இன்றுநாளையென்று ஏழைக்காசைசொன்னால் (என்று)

சரணங்கள்

1. பொன்னழகைவாழும் அன்னையுலகாளே
தன்னிகரிலாதஉன்னை நானடைந்தும் (என்று)

2. ஓய்விலாமலுன்னைச் சேவென்றுதிசெய்தும்
கோயிலாதவாழ்வை நேயமாய்க்கொடுத்து (என்று)

3. தஞ்சமென்றுமுத்து சாமிசாற்றுஞ்சொல்லை
கொஞ்சமுஞ்செவியிற் கொண்டிடாதிருந்தால் (என்று

கீர்த்தனை 14.

இராகம்-பியாகடை தாளம்-சாப்பு

பல்லவி

இன்றெனக்கருள் செய்குவாயம்மா—ஈரேழுலகும்
புகழ்ந்தேத்றுகின்ற—ஈஸ்வரிபுனை நம்பினேனம்மா

அனுபல்லவி

மன்றுளாடிய சங்கரன்மகிழ்
மங்கையேயருள் நங்கையேமுனம்
கன்றுமேய்த்தவன் தங்கையே ஜெக
காரணீ பரிபூரணிவந்து (இன்றே)

சரணங்கள்

1. முன்னமுலகத்துக்கிடர்கள்-செய்தமகிடன்-மூர்க்கமடங்க
முடிகளைத்துணித்தவள் நீயே,
நன்மனத்தவர்க கருள்புரிந்திடும்
நாயகிஉன்றன் சேயேன்நான்மிகு
கன்மனத்தவனுயிருப்பினும்
கருணைவைத்தெனையேனக் காத்திட (இன்)

அத்தனருள்பெற்ற அன்னையே—அழகவாழும்—உத்தமிநீயே
இத்தருணம் வந்தருள்வாயே.
கித்தமுமுனையே துதித்திடும்
முத்துசாமி தமிழ்க்கருள்புரி
சத்தியேயுனைச் சரணடைந்தேனென்
சித்தம்வைத்தென்றன் தீவினைதீர (இன்)

கீர்த்தனை 15.

இராகம்-பியாக் தாளம் சாப்பு

பல்லவி.

தாயே உனையே சதததமும் நம்பினனே.

அநுபல்லவி.

சேயேனுக்குற்றதுணை நீயேயெனவுணர்ந்தேன்
ஆயுமறையோர்துதி அழகைநகரில்வாழும் (தாயே

சரணங்கள்.

1. அன்பர்க்குறுந்துயர் அகற்றிடுமாயே
இன்பங்கொடுத்தெளி யேனைக்காப்பாயே
நின்பதம்பணிந்தோர்க்கு நிலத்திற்குறையுமுண்டோ
என்பதங்கேட்டருள் ஈஸ்வரியேஎன்றன் (தாயே)

2, பாசமுடனடியர் பரவிடும்பொருளே
தாசன்முத்துசாமிக்குன் சரணினிதருளே
நேசமுடனுனையே நித்தமும்பணிந்தேன்
ஈசனிடத்தமரும் எழிலுலகாளே (தாயே)

கீர்த்தனை 16.

["மையலானேனே துரையே" என்ற மெட்டு.]

இராகம்-அபூர்வம் தாளம்-ரூபகம்.

பல்லவி.

சரணடைந்தேனுன்
தாயே—சரணடைந்தேனுன்
அம்மா—சரணடைந்தேனுன்

அநுபல்லவி.

தரணி புனி தேவியுமையே (சரண

சரணங்கள்.

1. கன்னல் சூழழகை வாழும் அன்னையுலகேஸ்வரியே
கருணை செய்குவாய்—தாயே—அம்மா
கனிவுடனுகந்தென் மீதிற்—கருணை செய்குவாய் (தா)

2. இப்புவியில் நாயடியேன் இன்பமுடனுனைப்பணிந்தேன்
பொற்பதந்தருவாய்—தாயே—அம்மா
நற்பயன் பெற்றுய்ந்திடவே—பொற்பதந்தருவாய் (தா)

3. சிங்கவாகனத்தின்மீது தேவியேயெழுந்தருளி
இங்கெனக்கருள்வாய்—தாயே—அம்மா
மங்கையேயுன்மைந்தனுனேன் இங்கெனக்கருள்வாய்

4. தாரணியிலுன்புகழே சாற்று முத்துசாமி தமிழ் (தா)
கேட்டருளுவாய்—தாயே—அம்மா
வாரணியுந்தேவியே நீ—கேட்டருளுவாய் (தாயே)

கீர்த்தனை 17.

["பையல்மாரன்,, என்றமெட்டு]

இராகம்-அபூர்வம் தாளம்-ரூபகம்

கண்ணிகள்.

சுந்தரியே உந்தனருள்
தந்துஎன்னை ஆளுவாய்
சந்ததமு முனைத்துதித்தேன்
சிந்தைமகிழ்ந் தருள்வையே—மிகு (சுந்த)

பத்தர்களைப் பாதுகாக்கும்
உத்தமியே சத்திநீயே
எத்திசையும் நின்புகழைப்
பத்தியுடன் பாடிட—அருள் (சுந்த)

உன்னையன்றி மன்னுதெய்வம்
பின்னையொன்று நானறியேன்
அன்னையேமனோன்மணியே
என்னையாளு வாயிப்போதே (சுந்த)

இவ்வழகை தன்னில் வாழும்
எங்களுல கம்பிகையே
செவ்வையாயன் பர்பணியும்
தேவியழ கேஸ்வரியே. (சுந்த)

தாசன் முத்துசாமி சொல்லும்
தமிழினுக்கி ரங்கியென்மேல்
பாசம் வைத்தே ஆண்டிடுவாய்
மாசில்பர மேஸ்வரியே. (சுந்த)

கீர்த்தனை 18.

இராகம்-ஆனந்த பைரவி தாளம்-திரிபுடை

பல்லவி.

உன்னையே நம்பினேன் தாயே என்னையேநீ கண்பார்ப்பாயே

அநுபல்லவி.

தென்னழகை தன்னில் வாழும் தேவியுலகேஸ்வரியே (உன்)

சரணங்கள்.

நின்னையன்றி வேறுதெய்வம் நீணிலத்தில் நானறியேன்
அன்னையே அடிமையின்மேலன்புவைத்தாதரிப்பாயே (உன்)
எண்டிசையும் போற்றுகின்ற எங்கள் பராசத்திநீயே
அண்டினேன் நானென்று முனை அம்பிகையேகாத்தருள்வாய் (உன்)
ஏழை முத்துசாமி சொல்லை இன்பமுடன் கேட்டுகந்து
வாழையடி வாழையென்ன வாழவேவரங் கொடுப்பாய் (உன்)

முற்றிற்று.